முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி! அருட்பெருஞ்சோதி!! தனிப்பெருங்கருணை!அருட்பெருஞ்சோதி!!

**முருகப்பெருமானால் வாசி நடத்திக் கொடுக்கப்பட்டவர்தான் ஓங்காரக்குடிலாசான்**

**ஆன்மீகத்தில் அரசியலையும், அரசியலில் ஆன்மீகத்தையும் கரை கண்டவர் முருகப்பெருமான்**

**இந்தியா, தமிழகத்தில் இந்த வார நிகழ்வாக எதிர்கால பலன் குறித்த**

**மகான் அகத்தியர் அருளிய வார ஆசி நூல்**

**(பிலவ வருடம் ஆவணி மாதம் 27ம் திகதி முதல் புரட்டாசி மாதம் 03ம் திகதி வரை**
**செப்டம்பர் 12ம் திகதி ஞாயிறு முதல் செப்டம்பர் 19ம் திகதி ஞாயிறு வரை)**

**ஞானவாழ்வை விரும்புகின்ற ஆன்மீகவாதிகளுக்கு இந்நூல் ஒரு வரப்பிரசாதமாகும்**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

1. வேலவனே வெளிப்பட்டு வாவா
விந்தைமிகு ஞான ஆட்சிதர
காலமதை மாற்றும் சக்தியாக
கனிவு கொண்டு வாவா எனக்கூறி

2. கூறியே அகத்திய மகரிஷி யானும்
குறைவிலா இந்தியா தமிழகத்தில்
தெரியவே பிலவ யாளிதிங்கள் இருபானேழ்திகதி மேல்
தெரிவிப்பேன் நங்கைதிங்கள் சூல திகதி வரை

3. நடக்கும் நிகழ்வாக வருங்கால பலனை
நல் ஆசியாக அரங்கன் கேட்க உரைப்பேன்
இடரான நடப்பின் அவலங்கள்
இந்திய தமிழகப் பொருளாதார பின்னடைவுகள்

4. பின்னடைவுகள் விலகி மீண்டுவர
பொருள் மேல் வரும் வரி வரவை
நன்மைதரும் திட்டம் வழி முதலிட்டு
நாட்டின் வளர்ச்சிக்காக செயல்படுத்த

5. செயல்படுத்த நிலைமைகள் மாறும்
சிறப்பான வளர்ச்சிகள் காணும்
இயலவில்லை என கடன் சுமை கண்டு
இருக்கின்ற பொது ஆஸ்திகள் தன்னை

6. தன்னையே தனிமனிதவகை தாரைவார்த்தால்
தண்டல்காரன் எனும் பிடிநிலையாகி
இன்னலை மக்கள் அடைய நேரும்
இன்னும் பின்னடைவை சமூகம் காணும்

7. காணுமிந்த தனிமனித வாழ்வாதாரம்
கண்டுவரும் நிலைக்கும் கீழாகி
ஞானமிலா சக்திநிலை பெருகி
நம்பகத்தன்மை இல்லா நிலை பெருகநேரும்

8. நேருமைகொண்டு ஆளுமைகளும்
நீதிபட மக்களை மண்ணை காத்து
வறுமை வென்று வளர்ச்சி தரும்
வழியான ஆளுமை கண்டால்தான்

9. கண்டால்தான் இந்தியா தமிழகமும்
கண்டுவரும் கடன் சுமை கடந்து
உண்டாகும் வளர்ச்சித் தேசமாக
உலகமே வியக்கத் தலை நிமிரும்

10. தலைநிமிர தன்னிறைவு காண
தலைமைகள் ஆறுமுகன் வழிபாட்டை
தலைமையாகக் கொண்டு செய்தால் தான்
தவராசன் வழிக்குவந்தால் தான் அற்புதங்கள் நிகழும் வார ஆசி முற்றே.

–சுபம்–

முருகப்பெருமான் துணை

மகான் அகத்திய மகரிஷி அருளிய வார ஆசி நூலின் சாரம் :

பிலவ வருடம் ஆவணி மாதம் 27ம் நாள் 12.09.2021, ஞாயிற்றுக்கிழமை முதல் புரட்டாசி மாதம் 03ம் நாள் 19.09.2021, ஞாயிற்றுக்கிழமை முடிய உள்ள கால நிகழ்வுகள் :

விந்தைமிகு ஆற்றல்மிக்க ஞான ஆட்சியினை இவ்வுலகிற்கு அருளிட, முருகப்பெருமானே விரைந்து வெளிப்படுங்கள், கலியுகத்தின் காலத்தை மாற்றும் மகா சக்தியாக மக்கள் மீது கனிவு கொண்டு விரைந்து வெளிப்படுங்கள் என்றே முருகப்பெருமானை வரவேற்று வணங்கியே அகத்திய மகரிஷி யானும் இந்திய தேசத்திலும் தமிழகத்திலும் பிலவ வருடம் ஆவணி மாதம் 27ம் நாள் 12.09.2021, ஞாயிற்றுக்கிழமை முதல் புரட்டாசி மாதம் 03ம் நாள் 19.09.2021, ஞாயிற்றுக்கிழமை முடிய உள்ள காலத்தில் நடக்கவிருக்கும் நிகழ்வுகளை வார ஆசி நூலாக உரைக்கின்றேன் என்கிறார் மகான் அகத்திய மகரிஷி.

மக்களை துன்புறுத்தி வதைக்கும் நோய் தொற்று, இயற்கை பேரிடர்கள் என்றும் நடப்பதுடன், நாட்டினில் தமிழகத்தில் உண்டான பொருளாதார பின்னடைவுகள் என அனைத்தும் மக்களை துன்புறுத்திவர, பொருளாதார பின்னடைவிலிருந்து மீளவும் இயற்கை பேரிடர் துன்பங்கள் குறையவும் தேவையான முயற்சிகளை அரசு செய்வதுடன் பொருள்களின் மீது அரசு வரி விதித்து ஈட்டும் வருவாய்களை மீண்டும் மக்களுக்கு நன்மைதரும் திட்டங்களிலே முதலீடு செய்து நாட்டின் வளர்ச்சிக்காகவே செயல்படுத்திட வேண்டுமப்பா.

அவ்விதமே வரிவரவு மக்கள் நலனிற்கு முழுமையாக சென்றடைந்தால், நாட்டின் நிலைமைகள் விரைந்து மாறிடும், சிறப்பான வளர்ச்சியை காணுமப்பா. நாட்டின் பொருளாதாரத்தினை சரிசெய்ய முடியவில்லை எனக்கூறி, வருவாய் பெருக்கம் வேண்டும் என்ற பெயரில், கடன்சுமை நீக்க வேண்டும் என்ற பெயரில், அரசின் பொது சொத்துகளை வருவாய் கருதி தனி மனிதர்களிடம் தாரைவார்த்தால், தனிமனித அதிகாரத்தினால் தண்டல்காரனிடம் அகப்பட்டவர்கள் போல், மக்கள் அகப்பட்டு துன்பம் அடைந்திட நேருமப்பா. அதனால் நாடு மீட்சி அடையாமல் மேலும் பின்னடைவையே சந்திக்க நேருமப்பா.

தனிமனித வாழ்வாதாரம் தற்போது உள்ள நிலைமைக்கும் கீழாக சென்றுவிடும். ஒரு குறிப்பிட்டவர்களிடத்து அதிகாரமும் பொருளும் பெருகி மக்களிடத்து, அரசின் மீது நம்பகத் தன்மை குறைந்து, நம்பிக்கையற்ற நிலை உருவாகிடும்.

ஆதலினாலே அரசு நேர்மையுடனும் மக்கள் நலன் கருதியும் நீதியுடன் நடந்து நமது தேசத்தை காத்து மக்களின் வறுமையை போக்கும் விதமாக ஆட்சி செய்தால்தான் இந்திய தேசமும் தமிழகமும் கடன் சுமையில் இருந்து மீண்டு வளர்ச்சிமிக்க தேசமாக மாறிடும். உலகமே வியக்கும் வகையில் தலைநிமிர்ந்து நிற்கும்

இந்திய தேசம் உலக அரங்கில் தலைநிமிர தன்னிறைவுமிக்க தேசமாக ஆகிட, தலைமை பொறுப்பில் உள்ளவர்கள் கடவுள் நம்பிக்கையுடன் நடந்து, முருகப்பெருமான் வழிபாட்டினை முதன்மையாக கொண்டு, மக்களும் வழிபாடுகளை செய்து வந்தால், தவராசன் அரங்க மகான் கூறுகின்ற தயவே வடிவான சன்மார்க்க நெறியில் நின்றால்தான், அற்புதங்கள் நிகழ்ந்து நாடு தலைநிமிர்ந்து உலக அரங்கில் நிற்கும் எனக் கூறுகிறார் மகான் அகத்திய மகரிஷி.

–சுபம்–